ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஹரிஸமய திவாகரம்.

ஒன்பதாந் தொகுதி

பத்திராதிபன்:- பண்டித, ஆ. அரங்கராமாநுஜன்.

மதுரை

ஹரிஸமய திவாகரம் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பெற்றது.

பிரஜோத்பத்தி ஆங்கீரஸ௵

1932–1933.

ஸ்ரீ:

ஒன்பதாந் தொகுதியின்
உள்ளுறை.

விஷயம்.	எழுதியவர்.	பக்கம்
அரனதிகன் என்ற பாட்டு:-	ப. அ.	57
ஆதிபரதன்:-	,,	106
ஆதிவராகர்:-	,,	132
இராமாநுஜன் பொன்னடி ஸபை:-	குலசேகர ராமாநுஜ தாஸரவர்கள்	134
எம்பெருமானார் அவதார ரஹஸ்யம்:-	சேரன்குளம் ஸ்ரீ. உ. வே. வேங்கடாசார்யஸ்வாமி	19, 45, 54
கீதா ஸங்க்ரஹோபந்யாஸம்:-	வங்கிபுரம் ஸ்ரீ. உ. வே. காவிரிரங்கஸாமி அய்யங்காரவர்கள்	101
ஸத்ஸம்ப்ரதாயம்:-	ஸ்ரீ. உ. வே. ந்யாயவேதாந்த வித்வான் ரெங்கஸாமி அய்யங்கார் ஸ்வாமி	26
ஸத்ஸம்ப்ரதாய ஸபை:-	முதல் வருடோத்ஸவம்	111
சந்தாதார்களுக்கு அறிவிப்பு:-	ப. அ.	1
சென்னை ஸ்ரீவைஷ்ணவ மஹாநாடு:-	,,	109
தத்வஜ்ஞாநம்:-	,,	37
திருவள்ளுவர் கடவுள் வாழ்த்து:-	ஸ்ரீமாந் இராகவராமாநுஜ தாஸர் அவர்கள்	49, 97, 111
திருவரங்கேசர் திருக்குடை:-	ஸ்ரீமாந் ஆ. வ. பத்மநாப ராமாநுஜதாஸர் அவர்கள், ஆரியூர்	9

திவாகரத்தின் ஒன்பதாவதாண்டு:- ப. அ. ... 1

நம்பெருமாள் ப்ரஹ்மோத்ஸவச் சிறப்பு:- ஸ்ரீமாந் S. ராமஸாமி அய்யங்கார் ஸ்வாமி B. A. 65, 83

நன்கொடை:- ... ... ப. அ. ... 108

பன்மணித்திரள்:- ... ... ,, ... 5, 127

மதிப்புரை:- ... ... ,, 24, 70, 95, 109, 126

வேண்டுகோள்:- ... ... ,, ... 81

வைஷ்ணவ சமாஜம் காரைக்கால்:- ... ,, ... 125

வைஷ்ணவ மஹாநாடு பண்ணுருட்டி.:- கிருஷ்ணராமாநுஜ தாஸர் 73

ஒன்பதாந்தொகுதியில் வெளிவந்த புஸ்தகங்கள் :

இருசமய விளக்கம்:- ப. அ. 157-ம் பக்கம் முதல் 268ம் பக்கம் வரை

கம்பநாட்டாழ்வார்:- ஸ்ரீ. உ. வே. அப்புவையங்கார் ஸ்வாமி ஸ்ரீவில்லிபுத்தூர். 1ம் பக்கம் முதல் 92ம் பக்கம் வரை

பாகவதஸ்லக்ஷமார்த்த ப்ரதர்சனி:- பிரஹ்மஸ்ரீ நா. சாம்பசிவ சாஸ்திரிகள் ஆழ்வார்திருநகரி. 1ம் பக்கம் முதல் 34ம் பக்கம் வரை.

[illegible]:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஹரிஸமய திவாகரம்.

தொகுதி ௯. பிரஜோத்பத்தி௵ தைமீ பகுதி க.
Vol. 9. January & February 1932. No. 1.

திவாகரத்தின் ஒன்பதாவதாண்டு.

மின்னுருவாய்முன்னுருவில்வேதம்நான்காய்
விளக்கொளியாய்முளைத்தெழுந்ததிங்கள்தானாய்
பின்னுருவாய்முன்னுருவிற்பிணிமூப்பில்லாப்
பிறப்பிலியாய்இறப்பதற்கேயெண்ணாதெண்ணும்
பொன்னுருவாய்மணியுருவிற்பூதமைந்தாய்ப்
புனலுருவாய்அனலுருவில்திகழும்சோதி
தன்னுருவாய்என்னுருவில்நின்றவெந்தை
தளிர்புரையுந்திருவடியென்தலைமேலவே.

திருவுக்கும் திருவாகிய செல்வன்றன் இன்னருளால் திவாகரத்தின் எட்டாவதாண்டு இனிது நிறைவேறி ஒன்பதாவது ஆண்டு தொடங்கப்பெறுகிறது.

நமது திவாகரம், ஆய்ந்தமைந்த அறிவிற்பெரிய அறிஞர்களின் அரிய பெரிய கட்டுரைகளாகிய கிரணங்களைப்பெற்று ஆங்காங்குள்ள மாந்தர்களின் அகவிருளகற்றி வருகின்றதென்பதைக் கேள்வியுற்று கழிபேருவகையடைகிறோம்.

இஃதித்துணைப் பெருமையடைதற்கு முக்ய காரணமாக விஷயதானம்புரிந்த பேரறிவாளர்க்கு யாம் என்ன கைம்மாறு செய்யப்போகிறோம்? "கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட், டென்னாற்றுங் கொல்லோ வுலகு".

நமது திவாகரத்தை நடத்திவருகின்றவர்கள் இருவகைச்செல்வத்திலும் அசக்தர்களாயிருக்க, இதற்குவேண்டிய பெருநிதியுமில்லாதிருக்க, ஆதரிப்பாரும் அருகிவர இஃதித்துணையாண்டு நிலைபெற்று வருகிறதென்பது பெரிதும் ஆச்சர்யமாகுமே? இதனால் இது போற்றலுடைய இறைவன்றன் இன்னருளால் நடைபெற்றுவருகிறதென்பதும், அவனதன ஆச்சர்யகுணத்தை விளக்குவதற்கு இஃதோர் இலக்கியமாக இருக்கிறதென்பதும் பெறப்பட்டன.

நம்திவாகரத்திற்கு மூன்றுபேர்கள் அணுக்கத் தொண்டுபுரிந்தும் எட்டாண்டு முடிவாக உரிய ஊதியங் கிடைக்கப் பெற்றிலேம். கிடைத்திருக்குமேல அதனால் சில நன்மைகளை உலகிற்கு செய்ப்பித்துக் காட்டியிருக்கலாம். அந்தப் பாக்கியம் எங்கட்குக் கிடைக்காமல் போயிற்று. இஃதபிமானிகளுடைய குறையாகும் என்று குறைகூற அஞ்சுகின்றோம். எங்களுடைய பாபமேயாம்.

அறிவொழுக்கங்களாலும், மற்றெல்லாவகையாலும் சிறந்தவர்களாயுள்ள பெரியார், இப்பத்திரிகையை நடத்துவரேல் இஃதொரு குறைவுமின்றிப் பெரிதும் செழிப்புற்றிருக்கும். மதிப்புடையான் கைபுக்கமாணிக்கம் பெருவிலை பெறுமன்றே! ஒருவகையாலும் சிறிதும யோக்யதையில்லாதவர்கள் இதனை நடத்தத் துணிந்ததால், இது பெரிதும் சிறப்புறாது போயிற்றோ? என்று ஊகிப்பதற்கு இடமுண்டு.

ஆத்மாக்கள் துக்கமற்றுச் சுகமுற்று வாழ்வதற்கு இறைவன் திருவடியை அடையவேண்டும். அவன திருவடியடைவதற்கு உண்மையறிவே உறுதுணையாயிருக்கும். அவ்வுண்மையறிவோ அறிவொழுக்கங்களிற் சிறந்த ஆசார்யோபதேசத்தால் உண்டாகவேண்டும். இக்காலத்திலோ அத்தகைய ஆசார்யன்பாற்சென்று உபதேசங்கேட்டு உண்மையறிவைப் பெறுவதென்பது சாலவும் அரிய காரியமென்று துணிந்துரைக்கலாம். அவ்வருமையை நமது திவாகரம் ஒருவகையான் அகற்றுகிறதென்னலாம். இதனை ஆதரிக்க முன்வருவார்களாகில் அது பெரிதும் பயனளிப்பதோடு இப்பணியை மேற்கொண்டார்க்கு மிகவும் ஊக்கத்தையுமுண்டாக்கும்.

திவாகரத்தின் கருத்தின்படி ஒரு சிலர்களையேனும் அறிஞர் களாக்கி, அவர்களால் உலகிற்கோர் நன்மையுண்டாம்படிசெய்ய இதுகாறும் போதிய ஊதியங்கிடைக்கவில்லை. இதனை யுன்னி யுன்னி ஒருபுறம் வருத்தமுமுண்டாகிறது.

வடவிந்தியாவிலும் தென்னிந்தியாவிலும் ஆரிய ஸமாஜம் பிரம்மஸமாஜம் ராமாநந்தீயம் நிம்பார்க்க ஸம்ப்ரதாயம் சைதந்ய சமயம் பரமஹம்ஸ ஸம்ப்ரதாயம் மாதவ ஸம்ப்ரதாயம் முதலிய எத்துணையோ பல நவீன சமயங்கள் தோன்றியுள்ளன. அந்தச் சமயங்களைச் சார்ந்த பிரபுக்களாலும் அபிமானிகளாலும் பெரிதும் ஆதரிக்கப்பட்டு அச்சமயங்கள் குடதிசைத்தோன்றிய சந்திரன் போல விளங்கிவருகின்றன. பராசரர் வியாசர் போதாயனர் முதலானவர்களாலும், பராங்குச பரகால யதிவராதியர்களாலும் பொன்னேபோற் போற்றப்பெற்ற நம் ஸம்ப்ரதாயம் பொலிவு குன்றியிருப்பது ஓர் குறைவாகத் தோற்றவில்லையா ?

வேறு பல சமயங்களிலும் வீறுபலபடைத்த நம் சமய வுண்மையைப் பலர் கூடியிருந்து ஆராய்வதற்கும், ஆராய்ந்தவற்றைப் பிறருக்கு எடுத்துரைப்பதற்குமுரிய ஓர் சிறந்த நிலையம் எவ்விடத்திலாவது இருக்கின்றதா ? அந்தோ ! இஃதென்ன பரிதாபம் !! நம் சமயச்சார்பினர்களுள் சிறந்த தனவான்களில்லையா ? அபிமானிகளில்லையா ? அறிஞர்களில்லையா ? இவர்களெல்லாங்குழுமி ஓர் சமய ஆராய்ச்சிமன்றம் நிறுவுதற்கு முன்வருவார்களாக. ஆண்டுகள் நாள் திங்களாய் நிகழ்காலமெல்லாம் இவ்விஷயத்தைக் குறித்துப் பன்முறை முறையிட்டும், அவையெல்லாம் கடலோசையாய் ஒழிந்தனவே. இனி, அதுபோலாகாமல் பயனுடையதாம்படி இறைவன் இன்னருள் புரிவானாக.

உண்மையை ஆராய்ந்துபார்ப்போமாகில் நமது சமயம் விர்த்தியடையாமலிருப்பதற்கு பல இடையூறுகள் உள்ளனவென்பது நன்கு புலனாகும். அவை : கலாபேதமான பிணக்கு, ஒவ்வொரு கலையிலும் மடம் திருமாளிகை என்ற இருதிறத்தார்க்குமுள்ள கலகம், திருமாளிகையாருள் பல பிரிவானவர்க்கு ஏற்படும் போர், ஆலயங்களிலுண்டாகும் பூசல், இராமாநுஜ சாகேதர்கட்கும் மற்று

முள்ளவர்கட்கும் ஏற்படும் வியவஹாரம், தீர்த்தக் கலகம், சாதிச் சண்டை, கோத்திரவழக்கு முதலியனவாம். அம்மம்ம! என்னென் பேம். மற்றெந்தச் சமயத்திலும் இத்தனைப் பெரும்பிணக்க மிருக்குமென்று சொல்வதற் கியலுமோ? கார்யோற்பத்தியைக் குறித்துப் பிரதிபந்தகாபாவமும் காரணமாகுமாதலால் இவ்வளவு தடைகளிருக்கும்போது நம் சமயம் எங்ஙனம் விர்த்தியாகும்? ஒரு பைக்கூழிற்குப் பலகைகளிருக்குமேல், அது விர்த்தியாவதெப்படி?

நம் சமயம் பரவி விளங்குவதற்காகவே உத்தாரகாசார்யராகிய உடையவர் எழுபத்துநான்கு ஸிம்மாசனாதிபதிகளையும், மணவாள மாமுனிகள் அஷ்டதிக்கஜங்களையும் ஸ்தாபித்தார்கள். அக்காலத்தில் உட்பிரிவான கலகமில்லாதிருந்ததினால் நம்சமயம் சிறந்தோங்கியது. இக்காலத்தில், 'கோட்டைக்குட் குத்துவெட்டு' என்று வழங்குகிற பழமொழிக்கிணங்க நம்சமயத்தில் உட்பகைகள் பல தோன்றிவிட்டமையால் விர்த்தியடைவதற்கு அருமைப்படுகிறது.

ஸர்வேசுவரன், இரண்யன்பெற்ற வரங்களொன்றிலும் அகப்படாமல் நரசிங்கவடிவினனாய் அவதரித்து அவனை வெற்றிகொண்டதுபோல, அவனடியை அடைந்துய்ந்த அறிஞர்கள், இப்பொழுது நமது சமயத்திற் றோன்றியுள்ள பிணக்குகளொன்றிலும் அகப்படாமல் சமயாபிவிருத்தி செய்வதற்கு ஆராய்ச்சிசெய்வார்களாக.

திவாகரத் தொண்டிற்காக ஓர் அச்சியந்திரசாலை நிறுவப் பெற்ற விஷயம் யாவருமறிவர். சென்ற ஆண்டில் இதற்கு முதலாகப் போடப்பட்ட தொகை ரூ. 5500 இவ்வாண்டில் அத்தொகைக்குமேலதிகமாக ரூ. 500 சேர்க்கப்பட்டுள்ளன. ஆக ரூபா 6000-த்தில் திவாகரத்திற்குரிய ரூபா 2250. மற்றத் தொகை நம்மாலும் உயிர் நண்பர்களிடத்தில் கடனாகவும் வாங்கிப் போடப்பட்டுள்ளன. அவற்றைச் செலுத்தி அந்நிதியனைத்தையும் பத்திரிகைக்குப் பண்டாக்கவேண்டியது முக்கிய கடமையாகும. இன்னும் ஜீவித சந்தாதார்கள் மூலமாகவும், சந்தாதார்களிடத்திலிருந்தும் வசூலாகவேண்டிய ரூபா 1600 இருக்கின்றன. இவர்களெல்லாம் மனமுவந்து தாம் கொடுக்கவேண்டிய தொகைகளை விரைவிற்செலுத்திவிடுவார்களென்று எதிர்பார்க்கிறோம். மேலும், அபிமானிகளாயுள்ளவர்கள் இதனைப் பெரிதும் ஆதரிக்குமாறு வேண்டுகிறோம்.

ப. அ.

ஸ்ரீ:

பன்மணித்திரள்.

வாழ்க்கை வகை.

உலகத்திலுள்ளவர்கள் பல்வகைப் பணிகளைச்செய்து காலத்தைக் கழித்துவருகின்றார்கள், வாழ்க்கை வகையினை நூல்களில் விளக்கமாகக் காணலாம். அவை: ருதம், அமிருதம், மிருதம், ப்ரம்ருதம், ஸத்யாந்ருதம் என்பன. இவற்றுள் ருதமாவது-பயிர்கள் நிறைந்த வளமுடையவிடத்தில் தான்யங்களைப் பொறுக்கி ஜீவிக்கை. இவ்வாழ்க்கை, ஸத்தியத்திற்கு ஒப்பாகையால் ருதம் என்று சொல்லப்பட்டது. இப்பணியை முன்னுள்ள அந்தணருட் சிலர் மேற்கொண்டொழுகினார்கள். சேவகாவிர்த்தி நாயின் றொழிற்கு ஒப்பாகுமென்று கருதி இதனைக் கையாண்டனர்போலும். அமிருதமாவது—யாசிக்காமல் தன்னடையே கிடைக்கும் பொருளைக்கொண்டு வாழ்தல். இஃதமிர்தம்போல் சுகத்திற்குக் காரணமாயிருப்பதால் அமிருதம் என்று சொல்லப்பட்டது. மிருதமாவது— யாசித்துப்பெற்ற அரிசி முதலியவற்றால் ஜீவிக்கையாம். இது, மரணத்திற்கு ஒப்பாகத் துக்கத்திற் கேதுவாயிருப்பதால் மிருதம் என்று சொல்லப்பட்டது. ப்ரமிருதமாவது—நிலத்தை உழுது ஜீவிப்பதாம். இத்தொழிலானது-பூமியிலுள்ள பலவுயிர்ப்பொருள்கள் மரிப்பதற்கேதுவாய், மிக்க துக்கத்தைத் தருவதாயிருப்பதால் ப்ரமிருதம் என்று சொல்லப்பட்டது. ஸத்யாந்ருதமாவது—வியாபாரஞ்செய்து வாழ்தல். வாணிகத்தில் ஸத்யமும் பொய்யும் கலந்திருக்குமாதலால் இது, ஸத்யாந்ருதம் என்று சொல்லப்படும். இப்பொழுது காணப்படும் பல்வகையான வாழ்க்கைத் தொழில்களையெல்லாம் முற்கூறிய வகுப்பினுளடக்கலாம்.

நிற்க, இங்ஙனங்கூறிய வாழ்க்கை வகைகளுள் மெய்கலவாத பொய்யே சொல்லி வாழும்படி சொல்லவில்லை. அவ்வாறு வாழ்வது

மாபாதகமாம். கண்டதே காட்சி கொண்டதே கொள்கையென்கிற நாஸ்திக வாதியர்மாத்திரம் பொய்சொல்லியாவது, மற்றெவ்வகையிலாவது பொருளீட்டி உடல்கொழுப்புற வாழ்வதுதான் புருடார்த்தமென்பார்கள். இவர்கூறுவது, சுருதியுக்தி அநுபவங்கட்குப் பெரிதும் விரோதமாயிருக்குமாதலால் பொருளற்றதென்று விடுக்க.

இந்திராநுஜன்.

இந்திராநுஜன்—இந்திரனுக்குத் தம்பி; வாமனாவதாரஞ்செய்தருளிய எம்பெருமான். விரோசனனுடைய புதல்வனாகிய மஹாபலி சக்கரவர்த்தி, இந்திரன் முதலானவர்களை வெற்றிகொண்டு மூன்றுலகங்களையும் ஆண்டுவந்தான். அந்த இந்திரன் தந்தையாகிய காசிபர் தம்புதல்வன் அரசுரிமையிழந்து அலமந்திருத்தற்கு மிகவும் துக்கமுற்றுத் தம் மனைவியாகிய அதிதியுடன் அநேகமாயிரம் வருஷம் ஸர்வேசுவரனை ஆராதனை செய்துவந்தனர். அதன்மேல் எம்பெருமான் காசிபருக்குக் காட்சியளித்தனர். காசிபர் அளவிடவொண்ணா ஆனந்தமுற்று இறைவனை வணங்கி, 'எம்பெருமானே! தேவரீருடைய காட்சியால் கிருதார்த்தனானேன்; இனித் தேவரீர் அடியேனுக்குப் புத்திரராக அவதரித்து, மஹாபலியிடத்தினின்றும் இராஜ்யத்தை மீட்டி என்னுடைய புதல்வனாகிய இந்திரனுக்களித்தருளவேண்டும்' என்று வேண்டினர்.

இவரது வேண்டுகோளிற்கு இரங்கிய இறைவன் அதிதியினிடத்து வாமனரூபமாக அவதரித்து அப்பொழுதே பிரமசாரி கோலத்துடன் மஹாபலியின் யாகசாலைக்கெழுந்தருளினர். மஹாபலியும் இவரது வருகைகண்டு மகிழ்வுற்று 'யாது வேண்டும்' என்று கேட்டனன். வாமனன் 'எனக்கு மூவடி மண்வேண்டும்' என்று யாசித்துப் பெற்றுத் திரிவிக்ரமாவதாரங்கொண்டு ஒரு திருவடியால் பூமிப்பரப்பனைத்தையும் அளந்தனர். மற்றோர் திருவடியால் பிரமலோகம்வரை அளந்துகொள்ளும்போது பிரமதேவனால் திருவடிவிளக்கப்பெற்ற தீர்த்தத்தைக் கங்கைவடிவாகப் பெருகும்

படி அருள்செய்து, மூன்றுமடிக்காக மஹாபலியின் சிரசில் அடி யிட்டு அவனுக்குப் பாதாளத்தை இருப்பிடமாக்கினர். அதன்மேல் மூன்று லோகங்களையும் இந்திரனுக்களித்தனர்.

பிறவிக்கு வித்து எவை ?

பிறப்பிலியாகிய ஆத்மாவுக்குத் தேகத்தோடு பொருந் துதலைப் பிறப்பென்றும், தேகத்தை விட்டு நீங்குதலை இறப்பென் றும் வழங்குவர். இந்தப் பிறப்பிறப்பொழிந்தவிடத்திலே ஆத்மா வுக்கு ஆநந்தமுண்டாகும். அல்லாதபோது பெருந்துயரினில் அழுந்தும். ஆதலால் அறிவிற் பெரியார், 'பிறவி வேண்டேன்' 'பிறவி வேண்டேன்' என்று வெறுத்துரைக்கின்றார்கள்.

இனி, இந்தப் பிறவி எதனாலுண்டாகிறது ? இதனை ஒழிப்ப தற்கு உபாயமென்ன? என்று முன்னர் ஆராயவேண்டும். நோயின் மூலம் ஆராயாமல் மருந்தருந்தினால் நோய் நீங்காததுபோல, பிறவிக்கு வித்து இன்னதென்று ஆராய்ந்து அதனை ஒழித்தா லன்றிப் பிறவி நீங்கமாட்டா. பிறவி ஒழியாதபோது துன்பம் நீங்கா. அஃதகலாதபோது ஆநந்தமுண்டாக மாட்டாது. அதனால் பிறவிக்கு விதை எவை என்று ஆராயவேண்டியது கடமையாகும்.

அறிவு நூல்கள், பிறவிக்கு வித்து இரண்டே யாம் என்று கூறுகின்றன. அவை: அகப்பற்றும், புறப்பற்று மென்பன. இவற்றை அஹங்காரம் மமகாரம் என்பர்கள். இவற்றை ஒழிப்ப தற்குத்தான் அறிஞர்கள் முயல்கிறார்கள். ஆசார்யர்கள் உபதேசஞ் செய்கிறார்கள்.

உண்மைப் பொருளைக் கண்டவராகிய ஆழ்வார் ஸம்ஸாரிகளை நோக்கி, நுங்கள் தேகம் மின்னலைக்காட்டிலும் நிலைபேறற்றது. ஆதலால் விடவேண்டியவற்றைவிட்டுப் பற்றுதற்குரியதைப் பற்ற வேண்டும் என்று உபதேசித்தார். அவற்றைத் தெளிவாக உபதே சிக்கவேண்டும் என்றவிடத்து,

" நீர்நமதென்றிவை,வேர்முதன்மாய்த்துஇறை
சேர்மினுயிர்க்கதன்,னேர்நிறையில்லே "

என்று அருளிச்செய்தார். இந்தப் பாசுரத்தால் பிறவிக்கு விதை இவை யென்பதும், அவ்விதைகளை யகற்றுதற்கு மருந்து இன்ன தென்பதும் உரைக்கப்படுகின்றன. நீர்நமது என்றிவை — யான் எனது என்பனவற்றை. முன்னிலையாகச் சொன்னதினால் நீர்நமது என்றனர். தானல்லாத உடம்பை யானென்று மதிப்பதுதான் அகப் பற்றும், தன்னோடு சம்பந்தமில்லாத பொருளை எனது என்று க்ருதுவது புறப்பற்றும். இந்த இரண்டு பற்றுக்களையும், வேர்முதல் மாய்த்து—அடியோடொழித்து. அடியோடு ஒழிப்பதாவது—அபுருடார்த்தமென்று கருதி விடுவதாம். இறைசேர்மின்—பரம்பொருளாகிய இறைவனை யடைவீர்களாக. உயிர்க்கதனோர் நிறையில்லை—உயிர்க்கு இஃதோடு ஒப்பதும் மிக்கதும் இல்லையென்பதாம்.

திருவள்ளுவரும், அகப்பற்றும் புறப்பற்றும் அற்றவன் எவனோ அவனே பரமபுருடார்த்தத்தைப் பெறுவான்; என்ற கருத்தை, " யானெனதென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்கு, உயர்ந்தவுலகம்புகும் " என்ற திருக்குறளாற் கூறியுள்ளார். இதனாலும் பிறவிக்கு விதை இரண்டேயாமென்பது தெளிவாயிற்று. மற்றப் பற்றுகளெல்லாம் இவற்றுளடங்கும். இப்பற்றற்றுப் பற்றிலானிடத்திற் பற்றுற்றிருப்பதே அறிவுடையாரின் சிறந்த கொள்கையாம்.

அ. ப.

ஸ்ரீ:

திரு அரங்கேசர் திருக்குடை.

“வீற்றிருந்து ஏழுலகும் தனிக்கோல் செல்ல வீவில்சீர்—ஆற்றல் மிக்காளும் அம்மான்” ஆகிய அணியரங்கேசர் இட்சுவாகு முதல் இராமபிரான் ஈறாக இலங்கிய இரவிகுலப் புரவலர்கள் பற்பலராலும ஆராதிக்கப் பெற்றவராதலின், விண்ணவரும் மண்ணவரும் ஏத்திப் போற்றும் தனிப்பெருந் தலைவர் ஆயினர். சக்கரவர்த்திகளின் சிந்தைக்கினிய செல்வப்பெருமானாகத் திகழ்ந்த திருவரங்கராசர், அயோத்திமாநகரில் வேந்தர்களது திருவாராதனையில் எத்தகைய ராஜோபசாரங்கள் கண்டருளியிருந்தாரோ, அத்தகைய உபசார விசேஷங்களுடனேயே இன்றும அரங்கமாநகரில் திருவாராதனம் கண்டருளி வருகின்றார். முடிமன்னர் முற்றத்தில் எவ்வளவு ஏவலாட்கள் பார்த்திபர் கட்டளையிடும் பணிகளைச் செய்ய ஆர்த்தியொடு காத்து நிற்பரோ, அவ்வண்ணமே அரங்கமாநகரிலும் பற்பல பணியாளர்கள் பகவத் கைங்கர்யங்களில் பாசம் மிகுந்தவர்களாய்த் திருவரங்கன் திருக்கோயிலில் காத்து நிற்பா. அரங்கேசர் பணியாளர்கட்கு ஸ்தானீகர்கள் வாயிலாக அருளிப்பாடு சாதித்தவுடனே, அப்பணியாளர்களும் ‘நாயன்தே ! நாயன்தே !!’ என்று நயந்து நவில்வோராய் நம்பெருமாளை அணுகுவர். ஆஸ்தானத்திற்கு வெளியில மட்டுமன்றி, ஆஸ்தானத்திற்குள் வெளிப் புறப்பாட்டுக்குச் சித்தமாகும் அந்தரங்க சந்தர்ப்பங்களிலும் அர்ச்சகாதி கைங்கர்யபரர்களைப் பயபக்தி மிகுந்தவர்களாகப் பணிகொண்டுவருபவர் திருவரங்கேசர் ஒருவரே ஆவர். அதனாலேயே அரங்கநாயகன், ‘ராஜோபசார ஸம்ப்ரீதன்’ என்று அன்பர்களால் இன்றளவும் போற்றப்பட்டு வருகின்றான். அத்தகைய அரங்கநாயகன், திருவாய் திருக்கண்கள் திருக்கைகள் திருவுந்தி திருவடிகள் முதலிய திரு அவயவங்களால், காலையிளங்கதிரால் கவின்பெற *மலர்த்தப்பெற்ற கமலமலரைப் பழித்த ஒப்புயர்வற்ற பேரழகைப் பெற்றவனும் வடிவிணையில்லா மலர்மகளை

யும் அகலகில்லாது உடன் உறையச் செய்வித்த அற்புதப் பெருவனப்பினனு மாதலின், அன்பர்களால் 'திருவுக்கும் திருவாகிய செல்வன்' என்றும் 'அழகிய மணவாளன்' என்றும் போற்றப் பட்டு வருகின்றான்.

'செங்கோலுடைய திருவரங்கச் செல்வனார்' என்று விட்டுசித்தர் திருமகளார் வியந்து போற்ற நின்ற திருவரங்கராசர், இராமாவதார காலத்திலும் கிருஷ்ணாவதார காலத்திலும் தமது அரச நடையழகால் அன்பர்களை மையலேற்றி மயக்கியருளியதேபோல், இக்காலத்திலும் மதயானை வீறு மிக்க ஏறு வெகுளி மிக்க வேங்கை மிடுக்கு மிக்க கோளரி முதலியவற்றின் நடைகளோடு உலகினர் உவமித்து உரைக்கும் தமது ஒப்புயர்வற்ற நால்வகை நடைகளாலும் உண்மையன்பரை உகப்பித்து வருகின்றார். அத்தகைய நம்பெருமானது நடையழகுக்கு அவர் தங்குடையழகும் பெருந்துணையாக இருந்துவருவதால், அத் திருக்குடையின் வைபவத்தை ஈண்டு, சிறிதளவு விவரித்துரைப்போம்.

உலகத்தவராகிய உயிர்கள் உய்ந்திடும் வண்ணம் அவ்வுயிர்கள் அனைத்தையும் அருள் மிகுந்து தாங்கி நிற்கும் ஓர் உடம்பை ஒத்த உத்தம மன்னனுக்கு, கொற்ற வெண் குடை பேரழகு செய்வதாகும். அவனது குடைநிழலில் மண்ணுலகினர் மட்டுமன்றி விண்ணுலகினரும் சில வேளைகளில் வந்து முறையிட்டு நின்று குறை விலகப் பெறுவதுண்டு. இமையவர் தலைவனும் இந்திரனுக்கு இன்றளிர்க் கற்பகத்தின் இன்னிழல் அளியாத களிப்பை, அளித்துக் கவலை அகற்றியது இராமனது தந்தையின் தண்குடை நிழலே யன்றோ' 'நின்று அளிக்கும் தனிக்குடையின் நிழலொதுங்கிக் குறை இரந்து நின்ற' சுராலனன்றோ, இந்திரன் தசரத மன்னனால் தன் குறை நீங்கப்பெற்றான்! அதனாலன்றோ கம்பநாடரும் 'சந்திரற்கு உவமை செய் தரள வெண்குடை—அந்தரத்தளவும் நின்று அளிக்கும் ஆணையான்' என்று தசரதனைப் புகழ்ந்து புகன்றார்! அம்மன்னனது கொற்றக்குடையே அத்தகைய மாண்பினதாயின், அவனும் அவனது குலக்குமரனும் வீராகவனும் அவனது முன்னோர்களும் தங்களது குலதனமாகக் கொண்டு வழிபட்டுவந்த

திருவரங்கேசரது திருக்குடை எத்தகைய மாண்பினதாக இருத்தல் வேண்டும்!

'குழுமித் தேவர் குழாங்கள் கைதொழச் சோதி வெள்ளத்தினுள்ளே எழுவதோர்' திரு உருவினைப் நித்யவிபூதியாகிய அந்தமில் பேரின்ப வீட்டில் எழுந்தருளியிருக்கும் பரமபதநாதனுக்குக் கொற்றக்குடையா விளங்கும் திருவனந்தாழ்வார, அப்பெருமான் லீலாவிபூதியில் விபவாவதாரங் கொண்டு சஞ்சரித்தபொழுதும் அவனைவிட்டுப் பிரிந்திருக்க மனங் கொண்டிலர். அவ் வனந்தாழ்வாரே இராமாவதார காலத்தில் இளையபெருமாளாகவும் கிருஷ்ணாவதார காலத்தில் பலராமனாகவும் அவதரித்து, நீரை விட்டுப் பிரியின் உயிர் வாழகில்லாத மீனைப்போலும் என்றும் பெருமாளைப் பிரியகில்லாது உடன் திரிவார் ஆயினர். திருமால் தேவகி சிறுவனாய்த் திருவவதரித்தருளியவன்று, பச்சிளங் குழவியின் வடிவொடு வசுதேவன் தலைமிசை எழுந்தருளி நந்தகோன் மனைக்குச் சென்றபோது இடைவழியில் மழை பொழியக் கண்ட திருவனந்தாழ்வான்,

> "உயரிரு விசும்பெலாம் ஒளி செய் மின் தவழ்
> புயல் வளை நுண் துளி பொழிய, வெம்புழை
> அயில் எயிற்(று) அரவரசண்ணல், மாமணி
> வெயில் விரி பணாடவி மிசை கவிப்பவே"

ஏகினன் என்று ஆரியப்பப் புலவர் கூறியவாறு, கண்ணபிரானுக்குத் திருக்குடையாகச் சென்ற வைபவத்தின் நட்பம் சிந்தித்தற்கு உரியது.

"ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி—வழுவிலா அடிமை செய்யவேண்டும் நாம்"—என்று ஆழ்வார் அருளிச்செய்தவாறு, சென்றால் குடையாகவும் இருந்தால் சிங்காசனமாகவும் நின்றால் மரவடியாகவும் படுத்தால் பட்டு மெத்தையாகவும் மெல்லணையாகவும் நந்தாவிளக்கின் நன்மணிச்சுடர் பரப்பியும் திருமாலுக்கு என்றென்றும் அடிமை செய்தொழுகுவது அனந்தாழ்வார் இயல்பாகும். "ஆழ்வார் திருவரங்கப் பெருமாளரையா இத் திருவாய்மொழி பாடப் புக்கால் 'ஒழிவில் காலமெல்லாம், காலமெல்லாம், காலமெல்லாம்' என்று இங்ஙனே நெடும் போதெல்லாம் பாடி மேல்

போகமாட்டாதே அவ்வளவிலே தலைக்கட்டிப் போவராம்"-என்ற ஈட்டின் வாக்கியம் ஈண்டு கவனிக்கத் தக்கது. பரம பதத்தில் பெருமாளுக்கு இடையறாது அடிமைசெய்து வரும் இயல்பினராய திருவனந்தாழ்வார்,

"𑌅𑌨𑌨𑍍𑌤𑌃 𑌪𑍍𑌰𑌥𑌮𑌂 𑌰𑍂𑌪𑌂 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑌶𑍍𑌚 𑌤𑌤𑌃 𑌪𑌰𑌃 ।
𑌬𑌲𑌭𑌦𑍍𑌰𑌸𑍍 𑌤𑍃𑌤𑍀𑌯𑌸𑍍𑌤𑍁 𑌕𑌲𑍌 𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌃 𑌸𑍍𑌮𑍃𑌤𑌃 ॥"

என்பதற்கிணங்க திரேதாயுகத்தில் இளையபெருமாளாக அவதரித்து, பெருமாளுக்குப் படைவீட்டிலும் அடிமை செய்து வனவாஸத்திலும் அடிமை செய்தார் என்பதும்; துவாபரயுகத்தில் பலபத்ராக அவதரித்து காட்டிலும் நாட்டிலும் கண்ணனைப் பிரியாது உடன் இருந்துவந்தார் என்பதும்; கலியுகத்திலும் இராமாநுசராக அவதரித்து, 'திருவரங்கம் திருப்பதியே இருப்பாகக் கொண்டு' அணியரங்கனுக்கே அடிமைப்பட்டுத் தம்மளவில்வாழ்வதோடு நில்லாமல், அவ்வடிமைத்திறத்தில் தலைப்படவேண்டியதன் அவசியத்தையும் அதன் சிறப்பையும் அனைவர்க்கும் அறிவுறுத்தி மெய்யன்பர்கள் பலரையும் 'அவ்வெல்லையில் அடிமைத்திறத்தினில் என்றும் மேவும் மனத்தின'ராகச் செய்வித்து உய்வித்தருளியதும், 'எம்பெருமானார் தர்சன'த்தில் தலைப்பட்டோர் அனைவரும் அறிந்தனவேயாம்.

"ஒரு தேச விசேஷத்திலே போனால், செய்யக்கடவ அடிமைகளெல்லாம் இந்நிலத்திலே செய்யலாம் படிக்கு ஈடாகக் குறையற்றிருந்ததாகில்—நமக்குத் தான் இவ்வுடம்பு விரோதியாகையும். அன்றிக்கே அடிமை செய்கைக்குப் பாங்காய் இருந்ததேயாகில்—* * * சீலாதிகுணங்கள் தான் ஸ்பஷ்டமாய் இருக்கிறதும் இங்கேயாகில்—இனி அங்குள்ளாரும் வந்து அடிமை செய்கிறதும் இங்கேயாகில், நாமும் அங்கே (திருவேங்கடத்தில்) போய்ப் புக்கு அடிமை செய்வோம்"—என்ற ஈட்டின் வாக்கியத்தை நன்கு சிந்தித்துப் பார்க்குமிடத்து, நித்ய விபூதியில் அடிமை செய்திருந்ததைக் காட்டிலும்—லீலா விபூதியிலும் பெருமாளது விபவாவதார காலங்களில் லக்ஷ்மண பலபத்ரர்களாக அவதரித்துப் பெருமாளைப் பிரியாது உடனிருந்து அடிமை செய்ததைக் காட்டிலும்—அர்ச்சாவதாரத்

திருமேனியோடு அரவணையில் அறிதுயில் கொண்டருளிய அரங்கேசருக்கு, இராமாநுசராக அவதரித்து அடிமை செய்ததில் திருவனந்தாழ்வார் அடைந்தருளிய இன்பம் பன்மடங்கு சிறந்திருந்த தன் காரணம் செவ்விதிற் புலனாகும். 'பொன்னரங்கம் என்னில் மயலே பெருகும்' மனத்தவராகிய இராமாநுசர், தமது வாழ்வில் பெரும்பகுதியிலும் திருவரங்கப் பெருநகரிலேயே தங்கியிருந்து எல்லையில்லாக் கருணையங்கடலாகிய பெரியபெருமாளுக்குப் பல் வழிகளிலும் அடிமை செய்தும், பிறர் பலரையும் அடிமை செய்யச் செய்தும் அடிமைத்திறத்தைச் செவ்விதில் வளர்த்து அரங்கனுக்கு மகிழ்வூட்டிய காரணத்தால், அப்பெருமானால் 'உபயவிபூதிச் செல்வங்களுக்கும் உரியவர்' எனும் உயர்வளிக்கப்பெற்று, அவற்றுக்கு 'உடையவர்' எனும் திருநாமமும் சூட்டப்பெற்றார்.

திருவரங்கப் பெருநகரில், 'அணியரங்கன் திருமுற்றத்து அடியார்களை 'திருப்பதியார்' 'திருப்பணி செய்வார்' 'திருமொழி-திருவாய்மொழி விண்ணப்பம் செய்வோர்' 'உள்ளூரார்' முதலிய பத்துக் கொத்தினராகப் பகுத்தருளி, அவரவர் செய்ய வேண்டிய கைங்கர்யங்கள் இவையிவை யென்றுந் திட்டப்படுத்தியருளி 'தென்னரங்கர் செல்வ முற்றும் திருத்தி வைத்த' இராமாநுசர், அவ்வண்ணமே 'திருவரங்கச் செல்வம்' என்றென்றும் சிந்தாமலும் மங்காமலும் பொங்குமாறு கவனித்துக்கொண்டு வருமாறு பின்னுள்ளோர்க்கும் கட்டளையிட்டருளினர். ஸ்ரீரங்கேச கைங்கர்யபரர்கள் அத்தகைய இராமாநுசரது திருவாணையை என்றென்றும் கடவாது, நம்பெருமாளது கைங்கர்யங்களை, 'கட்டுக்குலையாமல்' செய்துவரக் கடமைப்பட்டவர்கள் ஆவர். "ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞா வர்த்ததாம் அபிவர்த்ததாம்"—என்று ஸ்ரீவைஷ்ணவர்கள் யாவரும் நாடோறும் செய்துவரும் மங்களாசாசனமும் இராமாநுசரது திருவாணையைப் பற்றியேதாம். இருள்தருமாஞாலத்தை விடுத்து நலமந்தமில்லதோர் பெருவீட்டை அடுத்த பின்னரும் திருவரங்கச் செல்வனைப் பிரிந்திருக்கச் சகியாத இராமாநுசர், நம்பெருமாள் நியமனப்படி அன்பர்களால் அர்ச்சாவதாரத் திருமேனியாக எழுந்தருளப் பண்ணப்பெற்று, அரங்

கனது ஆலயத்தில்—திருவாழியாழ்வார் திருக்கோயில் எதிரில் கோயில் கொண்டு, இன்றளவும் 'கோயில் அண்ணர்' எனும் தமது திருப்பெயரைக் காரணத் திருநாமமாகக்கொண்டு அன்பர்கட்குச் சேவை சாதித்து வருகின்றார். எம்பெருமானாரது புனிதத் திருமேனி திருப்பள்ளி படுத்தப்பட்ட இடமே, இன்று அவரது ஆலயமாக இலங்குகின்றது. மேலும், நம்பெருமாள் ஆண்டுதோறும் கண்டருளிவரும் மூன்று பிரமோற்சவங்களிலும் கடைசித் திருநாளன்று, அரங்கராசர் எதிராசருக்கு அவரது கோயிலுக்கு எழுந்தருளி, சேவை சாதித்துவருவதன் உட்பொருள் சிந்தித்து உணரற்பாலது.

எம்பெருமானுக்கு என்றென்றும் கைங்கர்யம் செய்வதிலேயே இன்பமடையும் இதயத்தினரான இராமாநுஜர், அன்பர்கள் போற்றும் அர்ச்சாவதாரத் திருமேனியாக எழுந்தருளியிருந்து திருவாராதனங் கண்டருள்வதன்பயனாக அரங்கனுக்குப் பணிசெய்யும் பேறு வாய்க்கப்பெறுமையால், நம்பெருமாள் வெளியில் புறப்பட்டருளுந்தோறும் 'சென்றால் குடையாம்' என்று ஆழ்வார் அருளியவாறு பொற்குடை வடிவினராய தமது சிந்தைக்கினிய செல்வப்பெருமானுக்கு இன்றளவும் கைங்கர்யம் செய்துவருகின்றார். ஆதலின், 'முகில் வண்ணன் அடியை அடைந்து அருள்சூடி உய்ந்த' நம்மாழ்வார் திருவரங்கேசரது திருப்பாதுகை வடிவில் இன்றளவும் எல்லாச் சிறப்புகளுடனும் எழுந்தருளியிருப்பதேபோல், "ஐகாந்திகாத்யந்திக நித்ய கைங்கர்யைகரதி ரூப நித்ய தாஸ்யம் தாஸ்யதீ- இதி விஸ்வாஸ பூர்வகம் பகவந்தம் நித்யகிங்கரதாம் ப்ரார்த்தயே" ('ஒரே உறுதியொடு கூடிய ஒழிவில்லாத நித்ய கைங்கர்யம் ஒன்றிலேயே விருப்பத்தை ஸ்வரூபமாக உடைய நித்ய கைங்கர்யத்தை அளித்தருள்வன்'—என்னும் ஆர்வத்தை முன்னிட்டு இறைவனை நோக்கி நித்ய கைங்கர்யத்தை வேண்டி நிற்கின்றேன்) என்று ஸ்ரீரங்க கத்யத்தில் பெருமாளைப் பிரார்த்தித்துக் கொண்டதற்கிணங்க—அப்பெருமாள் அருள்செய்தவண்ணமே இராமாநுசராகிய திருவனந்தாழ்வார், திருக்குடையாகிய திருவுருக்கொண்டு திருவரங்கேசருக்கு இன்றளவும் கைங்கர்யம் செய்து வருகின்றார்.

ஆதலால், திருவரங்கப் பெருநகரில் மட்டும நம்பெருமாளது ஸ்ரீ சடாரி போற்றப்பட்டு வருவதுபோல், அப்பெருமானது திருக் குடைக்கும் சிறந்த மரியாதைகள் அளிககப்பட்டிருக்கின்றன. ஸ்ரீ பாதுகை வடிவில் எழுந்தருளியிருக்கும் 'கலியும கெடும் கண்டு கொள்மின்' என்று மங்களாசாசனம செய்தருளிய நம்மாழ்வாரைப் போன்றே, குடை வடிவு கொண்டுள்ள 'செறு கலியைச் சிறிதுமறத் தீர்த்துவிட்டவ'ரான இராமாநுசரும் இன்றளவும் அரங்கமாநகரில் அன்பர்களால் பெரிதும் போற்றப்பட்டுவருவது இயல்பேயன்றோ!

சந்நிதிக்குள் உற்சவங்கள் கண்டருளப் பெருமாள் எழுந்தரு ளுங்கால பிடிக்கப்படுவதற்கென இருவித பொற்குடைகளும; திருப்பல்லக்குகளில வெளிப்புறப்படுமபொழுது பிடிக்கப்படுவதற் கென வெள்ளி வெண்குடையும்; பிரமோற்சவ காலங்களில் பெரு மாள் பெரிய வாகனங்களில் எழுந்தருளுங்கால் பிடிக்கபபடுவதற் கென மிக நீண்டதொரு வெள்ளிக்குடையும் இன்றும் இருந்துவரு கின்றன. அவற்றுள—தங்கக் குடைகளுள் ஒன்றில் திருவனந்தாழ் வானது திருவுருவம் இணைக்கப்பட்டிருப்பதுடன் இரத்தினங்கள் முதலிய மணிகளும் பதிக்கப்பட்டிருக்கின்றன. அததிருக்குடையே அத்யயனோத்ஸவம முதலிய விசேஷ காலங்களில் பெருமாளுக்குப் பிடிக்கப்பட்டு வருவதாகும். அத்திருக்குடையைச் சேவிப்போர்க்கு, அதுவே திருவனந்தாழ்வாராக இருந்து பெருமாளை உகப்பித்து வருவது என்னும் உண்மை இனிது புலனாகும். கனு உற்சவத்திற் கென முத்துக்குடை யொன்றும் முற்காலத்தில் இருந்ததாகவும், தற்காலத்தில் அது பழுதுபட்டிருபபதாகவும் தெரியவருகின்றது.

திருவரங்கச் செல்வனார் ஆஸ்தானத்தை விட்டு எங்கு எழுந் தருள்வதாயினும், வெற்றிக்குடையின்றி வெளிக்கிளம்பார். கொற்ற வர்க்கு உரிய விருதுகளில் சிறந்தது கொற்றவெண்குடையே யன்றோ! ஸ்ரீ பாதந் தாங்குவோரது திருத்தோள்களினின்றும் இறங்கி மண்டபத்தில் எழுந்தருளும் வரை பெருமாளைப் பிரியாது நிழல் செய்து நிற்கும் திருக்குடை, அதன்பின்னர் திருத்திரை மூடப்பட்டவுடன் அலட்சியமாக மற்ற இடங்களில் வைக்கப்பட்டு விடாமல், ஸ்தானீகர்களால் தாங்கப்பெற்று சேவகர்கள் முன்னே

எச்சரிக்கை செய்து செல்ல—எழுந்தருளப் பண்ணப்பட்டு கருவூலத்தில் சேர்க்கப்பெறும். இராக்காலங்களில் அத்திருக்குடை திருப்பந்தமின்றி எடுத்துச் செல்லப் பெறுவதில்லை. வாகனங்களில் ஆரோகணித்து நம்பெருமாள் எழுந்தருளும் போதும் மிக நீண்டதொரு வெண்குடை அப்பெருமானுக்கு அழகு செய்து வருகின்றது.

அணியாங்கேசர் 'அரிமா நடை' கொண்டு 'வையாளி சேவை' சாதித்தருளும்போதும்; அரையர்கள் போற்றி ஆட அர்ச்சகர் அடிகளைத் தாங்கி ஆட ஸ்ரீ பாதந் தாங்குவோர் திருமேனியைச் சுமந்து ஆட தாஸநம்பிகள் திருப்பந்தம் பிடித்து ஆட அழகிய மணவாளப் பெருமாள் 'படியேற்றசேவை' சாதித்தருளும்போதும், பெருமாளுக்கு ஸ்தானீகர்களால் பிடிக்கப்படும் திருக்குடை வெகு வேகமாகச் சுழற்றப்பெறும். அப்பொழுது, அத்திருக்குடை சுழலும்வேகத்தில்—ககனத்தில் சுழன்று நிற்கும் காற்றாடியை ஒத்து, சற்றும் அசையாது நிற்பதுபோல் தோன்றும் அற்புத அழகை கண்ணாரக்கண்டு களித்தே அறியவேண்டும். அவ்வழகை அனுபவித்த ஸ்ரீ வேதாந்ததேசிகன், "ஏ! பாதுகையே! அவ்வவ் வேளைகளில் உன்னைச் சாற்றிக்கொண்டு பெருமாள் ஒய்யார நடை நடக்கும்பொழுது குடையை மிகவும் வேகமாகச் சுற்றுவதால், அது சற்றும் சலனமில்லாததேபோல் தோன்றுகின்றது. அவ்வேளையில், ச்ருங்கார ரஸத்தினால் பெரிதும் குளிர்ந்திருப்பதும் இன்பம் மிகுந்ததுமான நம்பெருமாளது நடையழகு சிறந்து விளங்குகின்றது"—எனும் கருத்துப்பட,

"நித்யம் பதாவநி! நிவேஶ்ய பதம் பவத்யாம்
நிஷ்பந்த கம்ப விநிவேஶ விநிஹ்நுதாநி ।
ஶ்ருங்கார ஶீதல தராணி பவந்தி காலே
ரங்கேஶ்வரஸ்ய லலிதாநி கதாகதாநி" ॥

என்று அருளிச்செய்த பாதுகா சஹஸ்ர ச்லோகம் கண்டு, கவனிக்கத் தக்கது.

மேல்காட்டில் எழுந்தருளியபோது தம்மோடு வாதம் செய்ய முனைந்து முனவந்த பன்னீராயிரம் சமணர்களையும் ஆயிரஞ்சுடர் வாய் அரவரசப்பிரானாக எழுந்தருளியிருந்து வாதப்போரில் வெற்றி வாகை சூடிய எம்பெருமானாரது சிந்தைக்கினியவரான பட்டரிடம் வாதஞ்செய்து தோல்வியுற்று வெட்கிநின்ற சில வித்வான்கள், பாம் பொன்றைக் குடத்திலிட்டு வாயை மூடிக் கொண்டுவந்து வைத்து 'உள்ளிருப்பது என்ன ? உரைப்பீர்!'—என்று வினவினினர். அது கேட்ட பட்டரும் அதற்குள் 'திருவெண்கொற்றக் குடை இருக்கின்றது' என்று பதிலிறுத்தனர். அதனைக்கேட்டுப் பரிகசித் துச் சிரித்த பண்டிதர்களும பாம்பை வெளியில் விடுத்து 'இதுதான் கொற்றக்குடையோ?' என்றனர். பட்டரும் 'அன்றோ? 'சென்றால் குடையாம்' என்றன்றோ ஆழ்வார் அருளிச்செய்தது' என்னவும், பதில் பகரவொண்ணாப் பண்டிதர்களும் பட்டரைப் போற்றிச் சென்றனர். ஆறாயிரப்படி குருபரம்பரா ப்ரபாவத்தில் காணப் படும் இவ்வைபவத்திலிருந்து, திருவனந்தாழ்வார் அரியணை மரவடி மெல்லணை முதலியனவாக இருந்து பெருமாளுக்குச் செய்துவரும் கைங்கர்யங்களைக் காட்டிலும, திருக்குடையாக இருந்து பெரு மாளுக்குக் கைங்கர்யம் செய்துவரும சிறப்பே பட்டரது திருவுள் ளத்திற்குப் பெரிதும் உகந்ததாக இருந்தது என்பது இனிது புலனாகும்.

பகவத் பாகவத கைங்கர்யமே ஆன்ம உய்வுக்குச் சிறந்ததும் எளியதுமான் சீரியநல்வழி என்னும் பேருண்மையை உலகினர்க்குச் சொல்லாலும் செயலாலும் உணர்த்தியருள உதித்தருளிய இராமா நுசர், 'மொய்த்த வல்வினையுள் நின்ற' கத்திரபந்து முதலிய கொடிய பாவிகளையும் பகவந்நாம உச்சாரணமே காரணமாகக் கொண்டு உய்வித்தவனும் என்றென்றும 'அடியாரானர்க்கு இரங் கும பித்தனு'மாகிய அரங்கநாயகனுக்குத் திருக்குடையாக இருந்து இக்காலத்திலும் கைங்கர்யம செய்துவரும் வைபவத்தை வரு ணித்து உரைக்கவும் கூடுமோ? திருவரங்கப் பெருநகரில் நம்பெரு மாளது நடையழகிலும் அவ்வழகுக்குப் பெருந்துணையாக விளங் கும அப்பெருமானது குடையழகிலும மனமார்ந்த உண்மையன்

புடன் ஈடுபட்டு, என்றென்றும் பகவத் பாகவத கைங்கர்யமே தம்மை உய்விக்கக்கூடிய சீரிய நன்னெறி என்னும் உண்மையை உணர்ந்து, அதற்கிணங்க ஒழுகுவதே, 'எம்பெருமானுர் தர்சன'த்தில் ஈடுபட்டுள்ள மெய்யன்பர்களது முதற் பெருங் கடமையாகும். அத்தகைய சீரிய நல்லொழுக்கப் பேற்றை அளித்தருளுமாறு அரங்கராசரையும்—அவரது அகத்திற்கு இனிய எதிராசரையும் உண்மையன்பொடும் உருகும் உளளத்தொடும் மெய்யன்பர்கள் அனைவரும் பிரார்த்திக்கக் கடவராக. திருவருள் துணை செய்வதாக.

ஆ. வ. பத்மநாப ராமாநுஜ தாஸன்;
"திருமகள் நிலையம்"; ஆரியூர்.
(விழுப்புரம தாலுகா).

ஸ்ரீ:

எம்பெருமானுர் அவதார ரஹஸ்யம்.

—:o:—

[சேரன்குளம் ஸ்ரீ. உ. வே. வித்வான் வேங்கடாசார்ய ஸ்வாமி எழுதுவது.]

(8-ம் தொகுதியின் 173-ம் பக்கத்தொடர்ச்சி).

எம்பெருமானுர்க்கு முன்னுள்ளாரோடு ஆரோஹண ஸம்பந்தம். அஃதாவது—திருமுடி ஸம்பந்தம். இவரைப் பரம்பரையாகச் சிஷ்யராகக்கொண்டமுறை, ராம கிருஷ்ணாதியர் வஸிஷ்டருக்கும் ஸாந்தீபினிக்கும் சிஷ்யர்களாக அமையப்பெற்றது போலாகும். இவர்களை வஸிஷ்டாதிகள் சிஷ்யர்களாகக்கொண்டதினுல் வஸிஷ்டாதிகட்கு அதிசயமாகும். அதுபோல எம்பெருமானுரைச் சிஷ்யராகக் கொண்டதினுல் அவர்கட்கு அதிசயம் விளையத் தட்டில்லை. இந்த ஆரோஹண ஸம்பந்தம் லக்ஷ்மீநாதனிடஞ் சென்று முடிவு பெற்று நிற்கும்.

இவருக்குப் பின்னுள்ளாரோடு அவரோஹண ஸம்பந்தம். அஃதாவது—பரம்பரையாக இவருக்குச் சிஷ்யராய் அமைந்தமுறை

யாகும். அது பின்னுள்ளாருக்கு அதிசயத்தை விளைக்கும். உடையவரை ஆசார்யராகப பற்றினைூர்க்கு அதிசயம் விளையும் என்பதற்கு ஐயமுண்டோ? இருதிறததாகட்கும் அதிசயத்தை விளைக்கையாவது-முன்னுள்ளார்கட்கும் பின்னுள்ளார்கட்கும் உத்தாரகராயிருப்பதாம். இப்படி இவர் பூர்வாசார்யர்கட்குங்கூட உத்தாரகராய் நிற்பதை "[illegible]" "அர்வாம்சோ யத்பதஸரஸிஜ த்வம் த்வமாச்ரித்ய பூர்வே மூர்த்நா யஸ்யாந்வய முபகதா தேசிகா முக்திமாபு:" என்று பெரியார் பேசினர்கள். அவரோஹண ஸம்பந்தம் நம்மளவும் நமக்குப் பின்னும வருமதாகைபாலே கொழுநதுவிட்டோடிப் படரும்.

இனி, சேதனர் நின்ற நின்ற நிலைக்கிடாகப் பலன்களைப்பெற உபாயங்களை விதிக்கப்புகுந்த சாஸ்திரம், ஸாராஸாரங்கள் கலந்ததாயிருக்கும். நிருபகன் அவற்றுள் தனக்கு வேண்டிய அளவே கைக்கொள்ளக் கடவன். மற்றவை அவனுக்குத் த்யாஜ்யங்களாம். இதனைக் கீதாசார்யன் "[illegible]" "யாவாநர்த்த உதபாநே ஸாவதஸ் ஸம்ப்லுதோதகே, தாவாந் ஸர்வேஷு வேதேஷு ப்ராஹ்மணஸ்ய விஜாநத:" என்றருளிச்செய்தான். இதன் பொருளாவது:—நிறைந்து கொந்தளித்து வழியும் ஓர் ஏரியில் தாஹித்தவனுக்கு வேண்டியவளவே உட்கொள்ளப்படுவதுபோலக் கரைகட்டாக் காவேரிபோல் பரந்துகிடக்கும் வேதசாஸ்திரத்தில் நிஷ்க்ருஷ்ட ஜ்ஞாநமுடைய ஒருத்தனுக்கு வேண்டியவளவே க்ராஹிக்கத்தக்கது. மற்றவை த்யாஜ்யங்களாம்; என்பதாம். மேலும், "[illegible]" "அஸாரம் அல்ப ஸாரஞ்ச ஸாரம் ஸாரதாம் த்யஜேத், பஜேத் ஸாரதமம் சாஸ்த்ரம் ரத்நாகராதிவாம்ருதம்" என்றுஞ் சொல்லப்பட்டது. இதனுல் அஸாரமாயும் அல்பஸாரமாயும் ஸாரமாயும் ஸாரதாமாயுமுள்ள சாஸ்திரங்களை விட்டு ஸாரதமமாயுள்ள சாஸதிரததைப் பறறத்தக்கதென்பது பெறப்படும்.

அவற்றுள் அஸாரமான சாஸ்திரமாவது வேதத்தை ஒப்புக் கொள்ளாத புற மதத்தினர் கையாண்ட சாஸ்திரமாமென்று சிலர் சொல்லுகின்றனர். அநாதிஸித்தமாயும் தோஷமற்றதாயுமுள்ள வேதத்தில் அஸாராம்சமுள்ளதென்று சொல்வது கூடாதென்ற கருத்தால் இங்ஙனஞ் சொல்கின்றனர். இவர்களுடைய கருததும் ஒபபுக்கொள்ளத் தக்கதில்லை. ஏனென்றால், அப்படிப் பொருள் கொள்ளும்போது "அஸார சாஸ்த்ரம் த்யஜேத்" அஸாரமா யுள்ள சாஸதிரத்தை விடவேண்டுமென்று பொருள்படும் அங்வயங் கொள்ளவேண்டும. சாஸ்திரம் எனபதற்கு ஹிதத்தையேபோதிக் கிறதெனபது பொருள். வேத பாஹயமததகினாது சாஸ்திரம் ஹிதத்தையே போதிப்பிக்கிறதென்பது பொருந்தாது. அதன்படி ஒழுகுகினறவனுக்கு அநாத்தமே விளையும். ஆகையால் சாஸ் திரம் என்ற சொல்லிற்கு அது அர்த்தமாகாதாகையால் அஸார சாஸ்திரம் என்று அங்யவம் பொருந்தாது.

மேலும் ஸாராஸாரங்கள் நிறைந்து கிடக்கப்பெற்ற ஸமுத் திரத்தில் ஸாரதயமான அமிருததகதைக் கிரஹிபபதுபோல என்ற திருஷ்டாந்தத்தைப் பார்க்கும்போது அஸாரமென்று தள்ளபபடு மவை பாஹ்ய சாஸ்திரமென்றும், மற்றவை வேதத்தில் என்றும் இரண்டுமுறையாகக் காட்டவுமில்லை. ஆதலால் வேதத்திலே அஸார மான பாகமுள்ளதென்று கொள்ளவேணும். சேதனர்க்குச் சாஸ் திரத்தில் விசுவாசமுண்டாவதற்காக அவர்கட்கு இஷ்டமாயுள்ள சத்ருநாசமும ஐசுவர்யாதிகளுமாகிய அல்பமாயும் நிலையற்றனவாயு முள்ள ஸாதனங்களை விதிக்கும சாஸ்திரம் அஸாரமாம். ஸாரதம சாஸ்திரத்தில் விசுவாசமுண்டாகி அதைப் பற்றுவதற்கு ஒரு மார்க்கத்தைத் தேடியதாகையால், இந்த அஸாரபாகமும ஹிதத் தையே போதிக்கிறதாகக கொள்ளத தட்டில்லை.

மேலும், வழியல்லா வழியே சென்று தாம் அபேக்ஷித்த பலத்தையடையப் பார்ப்பது அநர்த்தமாய்த் தலைக்கட்டுமாகை யாலே, அதனை விலக்கித் தாம் விரும்பின பலத்துக்கு அநர்த்த மில்லா வழியைக் காட்டிக் கொடுக்கையாலும் இந்த பாகமும ஹிதத்தையே போதிக்கிறதாகும்.

அல்பஸாரமாவது—ஐசுவர்யாதிகளைக் காட்டிலும் மேற்பட்டதாய் ஜ்ஞாநத்தையும் ஆநந்தத்தையும் வடிவாகக்கொண்ட ஆத்மாவினுடைய அநுபவத்தையும் அதன் ஸாதனத்தையும் விதிக்கும் சாஸ்திரமாம். இந்த ஆத்மாநுபவமானது ஐசுவர்யாதிகளைப்போல நிலையற்றதன்றிக்கே சிறிது ஆநந்தத்திற்கு ஹேதுவாயிருக்கையாலே அந்த அம்சத்தை விதிக்கக்கூடியதிற்கு சிறிது ஸாரத்துவமுண்டு. ஆனல் எல்லைகடந்த ஆநந்தத்திற்கு இருப்பிடமான பகவதநுபவசுகத்தை நோக்கும்போது இது அஸத்கல்பமாய் (இல்லையென்று சொல்லும்படி) அல்பமாய் ஒரு நாளும் பகவதநுபவத்தைப் பெறவொட்டாது செய்யுமாதலால் இது அல்பஸாரமென்று சொல்லத் தட்டில்லை.

ஸாரமாவது—நிரதிசயாநந்த நிதியான எம்பெருமானை அநுபவித்துக் களிப்பதற்கு ஹேதுவான கர்மஜ்ஞாந பக்தி ப்ரபத்திகள் என்று சொல்லப்படுகிற உபாயாந்தரங்களை விதிக்கும் சாஸ்திரமாம். இந்த அம்சமானது, சாஸ்திரங்களில் உயர்ந்த பலமாகக் கொண்டாடிப் பேசப்படுகிற பகவதநுபவத்தைப் பலமாகக்கொண்டமுறையாலே ஸாரமாகும். ஆனல் இந்தப் பலத்தையடைவதற்குறுப்பாக பாதந்த்ரமாயுள்ள சேதனனுடைய ஸ்வரூபத்திற்கு விரோதமான முறையில், 'பகவதநுபவம் எனக்குப் பலமாகும்; அந்தப் பலத்துக்காக நான் இந்தச் சாதனத்தை அநுஷ்டிக்கிறேன்' என்கிற பாவநாத்வயம் என்று சொல்லப்படுகிற மானஸமாயுள்ளதொரு அபினிவேசத்தை யுட்கொண்டதாகையால் இதுவும் அவ்வளவு சிறந்ததாகாது.

ஸ்ரீ விஷ்ணு புராணத்தில் முமுக்ஷுவா யிருப்பானெருவன் தன்னுடைய ஸம்ஸாரபந்தம் நீங்க உபாஸிக்க வேண்டிய தெய்வத்தை நிச்சயிக்கப்புகுந்தவிடத்தில் ப்ரஹ்மா முதலான தேவர்களும், மற்றவர்களும் பாவநாத்ரயாந்வய முடையவராவார்கள். அஃதாவது —கர்மபாவனை ப்ரஹ்மபாவனை உபயபாவனை என்று மூன்றுவிதமாகச் சொல்லப்படுகின்ற பாவனையினுடைய அந்வயம் பெற்றவர்களாவர்கள். பாவனையாவது—'மத்பலஸாதநத்வாத் மதர்த்

தமிதம் கர்ம' என்கிற ஆர்தர உத்யோகமாகும். அஃதாவது—என்னுடைய பலத்துக்குச் சாதனமாகையாலே எனக்காக ஏற்பட்டது இந்தக் கர்மம் என்கிற ஒரு பாவவிசேஷமாகும். இது லௌகிகமாயும், வைதிகமாயுமுள்ள கர்மங்களைச் செய்யக்கூடிய இடத்தில் தன்னடையே வரக்கூடியதாயிருக்கும். இப்படிக் கர்மங்களைப்பற்றி வருமதுக்குக் கர்மபாவனை யென்று பெயராகும். அப்படியே மோக்ஷத்துக்காக ப்ரஹ்மத்தை உபாஸிக்குமிடத்தில் உபாஸநத்தைப்பற்றி வருமதுக்கு ப்ரஹ்மபாவனையென்று பெயர். அப்படியே கர்மங்களை யநுஷ்டித்துக்கொண்டு உபாஸநத்தைச் செய்யுமிடத்தில் இரண்டையும்பற்றி வருமதுக்கு உபயபாவனை யென்று பெயராகும்.

அப்படிப்பட்ட பாவனையில் அந்வயமுண்டாகும்போது இவன் அசுத்தனுவான். ப்ரஹ்மா முதல் யாவரும் பாவநாந்வயமில்லாதாரில்லை. இப்படி அசுத்தர்களாக அமையப்பெற்றவர்களாகையாலே அவர்கள் நமக்கு உபாஸிக்கப்படும் தெய்வமாகார்கள். ஆதலால் புருஷோத்தமனை ஸ்ரீய:பதியே மோக்ஷார்த்தமாக உபாஸிக்கப்படும் தெய்வமாவன் ; என்று உபாஸிக்கப்படுந் தெய்வத்தை நிச்சயிக்கப்புகுநதவிடததில் என்னுடைய பலத்துக்காக எனக்கேற்பட்ட ஸாதனமிது என்கிற நினைவுண்டாவதுகொண்டு அசுத்தியைச்சொல்லி அவர்களைக் கழித்திருக்கையாலே அப்படிப்பட்ட பாவனையினுடைய ஸம்பநதம் கர்மாதிகளை உபாயமாகக்கொள்ளும் போது விடமுடியாதவைகளாய்த் தன்னடையே வருகையாலே அந்த அம்சத்தைச் சொல்கிற சாஸ்திரம் சிறப்பற்றதாயிருக்கும்.

இனி, ஸாரதமமாவது—பெரிய பிராட்டியாரைப் புருஷகாரமாகக்கொண்டு தனக்கு அபேக்ஷிதமாயுள்ள மோக்ஷ பலத்துக்கு எம்பெருமானுடைய திருவடிகளையே உபாயமாக விதிக்கும் சாஸ்திரமாம். இந்த அம்சம் திருமந்திரத்தில் ஸூக்ஷ்மமாய் சிக்ஷித்துக்கொடுதத அத்யந்த பாரதந்த்ர்ய ஸ்வரூபத்துக்கு உசிதமான முறையாலே விதிக்கவந்ததாகையாலே இது, முன்னர் குறிப்பிடப்பட்டதைக்காட்டிலும் சிறந்ததாகும். ஆனாலும் நிஷ்க்ருஷ்டமாக இவன்

பற்றவேண்டியதாக மேலே சொல்லப்போகிற விஷயத்திலுண்டான பெருமை இவ்விஷயத்தி லில்லாமையாலே இது சிறப்பற்றதா யிருக்கும்.

இனி, ஸாரதரமாவது—ஸ்ரீவைஷ்ணவர்களைப் புருஷகாரமாகக் கொண்டு ஆசார்யனையே உபாயமாகப்பற்றும்படி விதிக்கப்புகுந்த சாஸ்திரமாகும். ஆனால் ப்ரஹ்மா முதல் யாவரும் பாவனாத்திரயாக் வய மில்லாதாரில்லை யென்றும், அப்படிப்பட்டவர்கள் அசுத்தர்க ளென்றும், ஆகையால் அவர்கள் உபாஸ்யர்களன்றென்றும் சொல்லி வைத்து, இங்கு ஆசார்யர்கள் உபாஸ்யர்களென்றும் சொல்லப் படும் விஷயங்களை விதிக்கப்புகுந்த சாஸ்திரம் ஸாரதமமென்றும் சொல்வது பொருந்ாதென்று சங்கிக்க வேண்டா.

ஆசார்யர்கட்கு அந்த அந்வயம் வாராது. இவர்கள், "தனக்கே யாக எனைக்கொள்ளவேணும்" என்றிருப்பர்கள். அதாவது— ஆழ்வார், எவ்வகையாலும் விலக்ஷணமாயிருந்தாலும் எனக்காக நீ கொடுக்கின்ற மோக்ஷவிஷயமான பேச்சு இங்குத் தேவையில்லை; உனக்காகவே என்னை நீ கொள்ளவேணும் என்றருளிச் செய்தார். இவரது கொள்கையைப்பற்றி நின்ற இவர்களும் அவன் தனக் குகப்பாகத் தங்களைக் கைக்கொள்ளவேண்டு மென்றிருப்பர்கள். ஆகையால் இவர்கட்குப் பலத்தில் அந்வயமில்லை. பலத்தில் அந்வய மில்லையாம்போது ஸாதநாநுஷ்டானத்திலும இவர்கட்கு அந்வய மில்லை.

(தொடரும்).

ஸ்ரீ:

மதிப்புரை.

கலைமகள்:—இஃதோர் சிறந்த மாதத் தமிழ்ப் பத்திரிகை. இப் பத்திரிகை பொறுப்பாளராகிய மகா-ள-ள-ஸ்ரீ R. நாராயணசாமி ஐய ரவர்கள் தற்பொழுதுள்ள உலக நிகழ்ச்சிக்கேற்ப, நல்ல சீர்திருத்த முறையில் இதனைவெளியிடுகின்றனர். இவரது நன்முயற்சிபோற்றத் தக்கதே. திங்கடோறும் குறிப்பிட்டகாலத்தில் தவறாது வெளியிட்டு வருகின்றனராதலால் இவ்வாசிரியர் இதனிடத்திற் கொண்டுள்ள ஊக்கமுடைமை நன்குபுலனாகும். நிற்க; விஞ்ஞான சாஸ்திரத்திலும், வேத சாஸ்திரத்திலும், தமிழ் இலக்கிய விலக்கணப்பனுவலிலும், வடமொழிக் கலையிலும் மிகவும் தேர்ச்சியுற்ற மதிநுட்பமுடைய பண்டிதமணிகளின் பல கட்டுரைகள் இதில் திகழ்கின்றன. அவை, இப்பத்திரிகைக்குப் பெரும்வனப்பையளிக்கும் பெற்றியன; பயில் வார்க்கு உணர்வையும், உவகையையும் ஒருங்கீயுந் திறத்தன; நல்லாற்றினுய்க்கும் வீறுடையன. கலைமகள்பால் பல்கலையறிவு நிரம்பி விளங்குவதுபோல அப்பெயர்புனைந்த இதுவும் அங்ஙனமே மிளிர்கிறது. அதனால் இதனைக்கையாள்வார் பலநூலறிவும நிரம்பப் பெறுவர். மேலும், யாண்டு பலவருந்திப் பயிலப்படுமவையெல்லாம் இஃதெளிதிற் பயிற்றுவிக்கும் நலலாசிரியன் போல்வது; இதில் விழுமிய பொருணிரம்பிய இனனுரைகளும், ஆங்கில நூல்களிற் கண்ட பலவரிய செய்திகளும், நகைச்சுவையளிக்கு நல்லுரைகளும் பயின்றுள்ளன. ஆதலால் இது, பண்டிதர்கட்கும், பெண்டிக்கட் கும், மாணவர்கட்கும், மற்றவர்கட்கும் பெரிதும் பயனளிக்க வல்லது. கிளேஸ் பேப்பரில் அச்சிடப்பெற்றது. ராயல் 100 பக்கம் கொண்டது. வேண்டுவோர் கீழ்க்கண்ட விலாசத்திற் கெழுதிப் பெற்றுக்கொள்க.

வருடச் சந்தா ரூ. 4—0—0.

வெளிநாட்டுக்கு ரூ. 5—0—0.

விலாசம் :—

"கலைமகள்" ஆபீஸ்,

மைலாப்பூர், சென்னை

ப—ர்.